**கொழும்பு பல்கலைக்கழ - 2020**
--------------------------------------------------------

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கொழும்பு பல்கலைக்கழகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் 107(5) ஆவது உப பிரிவு மற்றும் 18 ஆம் உறுப்புரையின் கீழ் விதிக்கப்பட்டுள்ள 1980 இன் 01 ஆம் இலக்க கொழும்பு பல்கலைக்கழக ஒழுங்குமுறையின் 20 ஆம் உறுப்புரை மற்றும் பல்கலைக்கழகச் சட்டத்தின் 108(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் அரசியலமைப்பு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து பல்கலைக்கழகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை

பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம், பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு பல்கலைக்கழகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

ஒட்டுமொத்தமாக மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பல்கலைக்கழகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கல்லூரியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்

இயன்றவரையில் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- பல்கலைக்கழகம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- பல்கலைக்கழகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக் கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 54 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனம் பொறி மற்றும் உபகரண வகுப்பிற்கு உரிய ஒரு சொத்தின் மீள் மதிப்பீட்டு பெறுமதி அதிகரித்தல் அல்லது குறைதல், வேறு சொத்து வகுப்புகளிற்கு உரிய மீள்மதிப்பீட்டு பெறுமதிக்கு ஈடு செய்யப்படக்கூடாதிருப்பினும் ஸ்ரீபாலீ மண்டபத்தின் அலுவலக உபகரணங்களின் மீள்மதிப்பீட்டு பற்றாக்குறையான ரூபா 5,437,395 ஆன ஆய்வுக்கூட மற்றும் கல்விசார் உபகரணங்களின் மீள்மதிப்பீட்டு மிகையினால் ஈடுசெய்தமையினால் மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் மற்றும் வருடாந்த மிகை அப் பெறுமதியினால் குறைவாக மற்றும் அதிகமாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் கணக்கிடப்படல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 55 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக சொத்து மீள்மதிப்பீட்டு ஒதுக்கங்களிலிருந்து ரூபா 42,248,667 மூலதன வழங்கல் தள்ளுப்படி ( Amortization of Capital Grant) கீழ் நிதிச் செயலாற்றல் கூற்றில் வருமானத்திற்கு சீராக்கப்பட்டிருந்ததினால் அப் பெறுமதியினால் ஆண்டின் மிகை மற்றும் மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் அதிகமாக மற்றும் குறைவாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | முழுமையான தேய்மானம் செய்யப்பட்ட சொத்துக்களின் மிகை தேய்மான அளவு மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்திற்கு வரவு வைக்கப்பட்டிருப்பதனால் சொத்து மீள்மதிப்பீடு ஒதுக்கத்திலிருந்து மாற்றல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் கணக்கிடப்படல் வேண்டும். |
| (இ) | முழுமையாக தேய்மானம் செய்து முடிவடைந்த எனினும் தற்போது பயன்படுத்தி வருகின்ற கூட்டுத்தொகை ரூபா 80,706,090 ஆன ஆதனம், பொறி மற்றும் உபகரணம் மற்றும் புலப்படா சொத்து தொடர்பாக இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் - 3 பிரகாரம் மீண்டும் மீளாய்வு செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | புலப்படா சொத்துக்கள் அனைத்து ஆண்டுகளிலும் வாழ்கை காலம் மீளாய்வு செய்தல் நடைமுறையானதல்ல. இந்த கணக்கு 2021 ஆம் ஆண்டில் முழுமையாக பகுப்பாய்வு செய்யப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் கணக்கிடப்படல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைப்பாடுகள்

| கணக்கீட்டு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஆதனம் பொறி மற்றும் உபகரண தேய்மான கொள்கையின் பிரகாரம் விளையாட்டு உபகரணங்களின் தேய்மானம் செய்யும் சதவீதமானது 25 சதவீதமாக காணப்படினும் 17 சந்தர்ப்பங்களின் போது அக் கொள்கையிலிருந்து விலகி தேய்மானம் கணிக்கப்பட்டமையினால் மீளாய்வாண்டிற்கு தொடர்புடையதாக தேய்மானம் ரூபா 1,299,182 குறைவாக ஒதுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஆண்டின் மிகை மற்றும் விளையாட்டு உபகரணங்களின் நிகர பெறுமதி அப் பெறுமதியினால் அதிகமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | இங்கு காண்பிக்கப்படுகின்ற 17 சொத்துக்கள் கணக்கீட்டு மென்பொருளிற்கு உள்ளடக்கும் போது சொத்து அடையாளப்படுத்தும் மாதிரி பிழையாக உள்ளடக்கப்பட்டிருந்தது. அதனால் ஆண்டு தேய்மான கணிப்பீடு வேறுப்பட்டுள்ளது. அது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கு வைக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் கொழும்பு பல்கலைக்கழகத்தின் செயற்பாட்டு விளைவு ரூபா 16,639,832 ஆன மிகையாகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 696,404,210 ஆகக் காணப்பட்டது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 713,044,042 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. இம் முன்னேற்றத்திற்கு நடைமுறை செலவினத்திற்காக அரசின் கொடுப்பனவு உட்பட மொத்த வருமானம் ரூபா 240,814,933 இனால் அதிகரித்தமையும் ஊழியர் பணிக்கொடை ஒதுக்கங்கள் ரூபா 645,403,392 இனால் குறைவடைந்தமையும் பிரதான காரணங்களாக காணப்பட்டன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) பல்கலைக்கழகத்தின் வெவ்வேறு பீடத்தினால் ஆரம்பிக்கப்பட்டிருந்த 35 நிதியங்களின் மீளாய்வாண்டு இறுதி திகதி இல் கூட்டுத்தொகை ரூபா 96,941,682 ஆக காணப்படினும் அந்நிதி தொடர்புடைய குறிக்கோள்களுக்காக செலவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்எருக்கவில்லை. விஞ்ஞான பீடத்தின் ஊடாக | 2020 ஆம் ஆண்டில் ரூபா 272 மில்லியன் இவ் லெஜர் கணக்கின் ஊடாக செலவிடப்பட்டிருந்தது. 2020 ஆம் ஆண்டில் மாணவ மாணவிகளின் விளையாட்டு செயற்பாடுகள் நடத்தப்படாமையினால் அச் செலவினம் குறைந்திருந்தது. இந்த மாணவர்கள் தொடர்பாக அறிவிக்கப்படினும் சில மாணவர்களுக்கு விண்ணப்பப்படிவங்கள் ஏவையேனும் | நிதியம் ஸ்தாபிக்கப்பட்ட பணிகள்/நோக்கங் களுக்காக தகுந்த காலத்தில் செலவு செய்யப்பட வேண்டியதுடன் புலமைபரிசில் வழங்கும் செயற்பாடு வினைத்திறனாக |

| | | | |
|---|---|---|---|
| | புலமைபரிசில் வழங்குதவற்கு ஆரம்பிக்கப்பட்டிருந்த 11 நிதியங்கள் மீளாய்வாண்டில் தசெம்பர் 31 இற்கு காணப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 1,162,177 ஆன தொகை 2 ஆண்டுகளுக்கும் 25 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலத்தினுள் புலமைபரிசில் வழங்குவதற்கு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கிடைக்கப்பெறாமை, இரசாயன விஞ்ஞான திணைக்களத்திற்காக நிதி குறைப்பாடு போன்ற காரணங்கள் தாக்கமளித்திருந்தன. மேலும், புலமைபரிசில் வழங்கும் செயற்பாட்டில் ஏதும் தாமதம் ஏற்பட்டிருந்தால் எதிர்காலத்தில் அதற்காக முறையான நடவடிக்கைகள் எடுக்கப்படுமெனவும் தெரிவிக்க விரும்புகின்றேன். | மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | 61 உத்தியோகத்தர்களிடமிருந்து 01 தொடக்கம் 32 ஆண்டுகள் வரை பழைய கூட்டுத்தொகை ரூபா 1,351,164 ஆன கடன் நிலுவை மீளாய்வாண்டு இறுதி வரையிலும் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடமை விட்டுச் சென்றுள்ள, கடமையிலிருந்து விலகியுள்ள மற்றும் மரணித்துள்ள ஊழியர்களின் கடன் தொகையானது சேமலாப நிதி விடுவிக்கும் போது அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இடைநீக்கம் செய்யப்பட்ட ஊழியர்களின் கடன் தொகை பரிசோதனை நடவடிக்கைகள் நிறைவடைந்த பின்னர் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இடமாற்றப்பட்டு சென்ற ஊழியர்களின் கடன் தொகை அறவிடப்படுவதற்காக நினைவூட்டல் கடிதங்கள் தொடர்புடைய நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. | தொடர்புடைய கடன் தொகைகளை விரைவாக அறவிடப்படுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொளளப்படல் வேண்டும். |
| (இ) | முதுகலை பட்டப்படிப்பு நிறைவு செய்வதற்கான சம்பளமுடைய கல்வி விடுமுறை பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த 18 பேராசியர்கள் தொடர்புடைய தகுதிகள் பூர்த்தி செய்யப்படாது மீண்டும் கடமைக்கு வருகை தந்நததன் காரணத்தினால் அறவிடப்பட வேண்டிய பிணை பெறுமதி ரூபா 78,241,772 ஆக காணப்பட்டது. அவ்வாறே, மீண்டும் கடமைக்கு வருகை தராத 12 பேராசியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 02 தொடக்கம் 18 ஆண்டுகளுக்கிடையேயான பழைய கூட்டுததொகை ரூபா 20,212,040 மீளாய்வாண்டில் திசெம்பர் 31 திகதி வரையும் அறவிடப்படுவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த பேராசியர்களுள் 7 பேர் கடமையில் இருந்துக்கொண்டே அவர்களின் போராசிரியர் பட்டத்தினை நிறைவு செய்துள்ளதுடன் தொடர்படைய பட்ட சான்றிதழ் முன்வைப்பதற்கு அவர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர். 8 போராசியர்கள் அவர்களின் போராசிரிய பட்டத்தினை இன்னுமாக கற்கின்றார்கள் என பல்கலைக்கழகத்திற்கு தெரிவித்துள்ளனர். மூன்று பேராசிரியர்களின் ஒப்பந்தத்தில் கற்கைநெறி வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட வேண்டுமென்ற உறுப்புரையொன்று காணப்படாமையினால், சட்ட குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் கட்டுப்பாட்டு சபையினால் அவ் உடன்பட்ட தொகை செலுத்தி விடுவிக்கப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. வெளிநாடு | உடன்பட்ட பிரகாரம் தொடர்புடைய பெறுமதி அறவிடப்படுவதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | சென்று மீண்டும் கடமைக்கு வருகை தராத பேராசிரியர்களுக்கு தொடர்பான அறவிடப்பட வேண்டிய பெறுமதி அறவிடப்படுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றதென கூற விரும்புகின்றேன். | |
| (ஈ) | பல்கலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவி வகுப்புக்கள் 12 இற்காக நீண்ட காலமாக காணப்பட்ட 33 வெற்றிடங்கள் நிரப்பப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு உரியதாகாத 08 பதவிகளுக்காக 11 நபர்கள் ஒப்பந்த அடிப்படையில் இணைக்கப்பட்டிருந்ததுடன் அவர்களின் சேவை காலம் 05 மாதத்திலிருந்து 04 வருடங்கள் வரையான வீச்சில் காணப்பட்டது. | இதில் 06 பதவிகளுக்கான 22 வெற்றிடங்களுக்காக இணைத்தல் நடைமுறை இல்லாமை அல்லது அங்கீகரிக்கப்படுவதில் தாமதத்தினால் வெற்றிடங்கள் உருவாகியுள்ளன. சுகாதார சேவையில் முகாமைத்துவ பராமரிப்பு பதவிகள் இரண்டு இச் சந்தர்ப்பத்தில் நிரப்பல் தேவையானதல்லவென பிரதான வைத்திய அதிகாரியினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. கல்விசாரா பதவியணியினர் இணைத்தல் அரசினூடாக தற்காலிகமாக இடைநிறுத்தப்படலும் வெற்றிடங்கள் நிரப்பல் தாமதத்திற்கு தாக்கமளித்திருந்தது. பல்கலைக்கழகத்திற்கு தேவையான செயற்பாடுகளுக்காக கட்டுப்பாட்டு சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் ஒப்பந்த அடிப்படையில் இவ் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | அத்தியாவசிய பதவியணியினர் தேவைப்பாடு தொடர்பாக பதவியணியினர் திருத்தப்படுவதற்கு ம் வெற்றிடங்கள் நிரப்பும் செயற்பாடு வினைத்திறனாக மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |